டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண்
ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 29.08.2026 சனிக்கிழமை | பக்கங்கள் 27 | RNI No.TNTAM/2012/49602 | Vol.14, Issue : 060 - Madurai | Online Edition

# நுண் உணவு பதனப்படுத்துதல் சந்தையில் புத்தாக்கம் - புதிய பரிமாணங்களை அடையும் இந்தியச் சுவைகள்

புது தில்லி, ஆக.28

இந்தியா ஹேபிடேட் சென்டரில், இந்தியாவின் உணவுப் பன்முகத்தன்மையைக் காட்சிப்படுத்தும் ஒரு தேசிய கண்காட்சி பார்வையாளர்களை வரவேற்றது. அங்குள்ள அரங்குகளில், தனித்துவமான, பாரம்பரிய உணவுகள் கண்ணைக் கவரும் வகையில் வரிசையாக வைக்கப்பட்டிருந்தன. அவற்றில் ஒவ்வொன்றும் அடித்தள தொழில்முனைவையும் பிராந்திய பாரம்பரியத்தின் கதையையும் சொன்னது.

இந்த உற்சாகமான பின்னணியில், உணவு பதனப்படுத்துதல் தொழில்கள் அமைச்சகம், 2026 ஆகஸ்ட் 24 முதல் 25 வரை பிரதமரின் சிறு உணவு பதனப்படுத்துதல் நிறுவனங்களை முறைப்படுத்துதல் திட்டத்தின் கீழ் சந்தை கண்காட்சியை நடத்தியது. 25 மாநிலங்கள் / யூனியன் பிரதேசங்களைச் சேர்ந்த கண்காட்சியாளர்களை இது ஒன்றிணைத்து, இச்சந்தை இந்தியாவின் வளமான சமையல் பன்முகத்தன்மையைக் கொண்டாடியது. இந்த நிகழ்வு, சிறு உணவு நிறுவனங்கள், சுய உதவிக் குழுக்கள், உழவர் உற்பத்தியாளர் அமைப்புகள், கூட்டுறவு சங்கங்கள், தொழில்முனைவோர் ஆகியோர் தங்கள் தயாரிப்புகளைக் காட்சிப்படுத்தவும், வாங்குபவர்களுடன் கலந்துரையாடவும், புதிய சந்தைகளை ஆராயவும் ஒரு தளத்தை வழங்கியது. சிறுதானியங்கள், மசாலாப் பொருட்கள் முதல் ஊறுகாய்கள், சிற்றுண்டிகள், பானங்கள் பிற மதிப்பு கூட்டப்பட்ட உணவுகள் வரை அனைத்தையும் உள்ளடக்கிய இச்சந்தை, உள்ளூர் மூலப்பொருட்களையும் பாரம்பரிய அறிவையும் நம்பிக்கைக்குரிய வர்த்தக முத்திரைகளாக மாற்ற முடியும் என்பதை நிரூபித்தது. 2020 ஜூன் 29 அன்று தொடங்கப்பட்ட பிரதமரின் சிறு உணவு பதனப்படுத்துதல்

நிறுவனங்களை முறைப்படுத்துதல் திட்டம், சிறு உணவு நிறுவனங்களுக்கு நிதி, தொழில்நுட்பம், வணிக உதவிகளை வழங்கி, தொழில்முனைவோர் புதிய நிறுவனங்களை நிறுவ அல்லது ஏற்கனவே உள்ளவற்றை வலுப்படுத்த உதவுகிறது.

இத்திட்டத்தின் கடன் சார்ந்த மூலதன மானியத்தின் கீழ், ஒரு நிறுவனத்திற்கு ரூ.10 லட்சம் வரை, மொத்த திட்டச் செலவில் 35 சதவீதம் வழங்கப்படுகிறது. இதன் மூலம், சம்பந்தப்பட்ட நிறுவனம் ரூ.10 லட்சம் கடனுக்கு எதிராக ரூ.3 லட்சத்திற்கும் அதிகமான மானியத்தைப் பெற முடியும். இந்த ஆதரவு, நிறுவனங்களை போட்டித்தன்மை மிக்கதாக மாற்றவும், அதன் செயல்பாடுகளை முறைப்படுத்தவும், வளர்ச்சிக்கான புதிய வழிகளைத் திறக்கவும் உதவுகிறது.

இவை வெறுமனே வணிகங்கள் வளர்வதைப் பற்றியவை அல்ல. மாறாகக் கனவுகள் மேலும் பெரிதாக வளர்வதற்கான தைரியத்தைக் கண்டறிவதைப் பற்றியவை. அதன் வண்ணங்கள், நறுமணங்கள், சுவைகளுக்கு அப்பால், அந்தச் சந்தை இன்னும் நீடித்து நிலைக்கும் ஒன்றை விட்டுச் சென்றது. ஒரு கனவுக்கு வாய்ப்பளிக்கப்பட்டால், அது ஒரு வாழ்க்கையையே மாற்றும் என்ற நினைவூட்டல் அது.

# வேளாண்மையில் டிரோன் தொழில்நுட்பம் குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி

திருவள்ளூர், ஆக.28

திருவள்ளூர் மாவட்டம், பூண்டி வட்டாரம் வேளாண்மைத் துறையின் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை (அட்மா) மாநில விரிவாக்க திட்டங்களுக்கான உறுதுணை சீரமைப்பு திட்டத்தின் மூலம் பூண்டி வட்டாரத்த்தில் உள்ள நெல்வாய் கிராமத்தை சார்ந்த 40 மேற்பட்ட விவசாயிகளுக்கு வேளாண்மையில் டிரோன் தொழில்நுட்பம் என்ற தலைப்பின் கீழ் பயிற்சி வழங்கப்பட்டது. இப்பயிற்சிக்கு அண்ணாமலையார் அக்ரோ சென்டர் வசந்தகுமார் கலந்து கொண்டு வேளாண்மையில் ட்ரோன் (Drone) தொழில்நுட்பம் என்பது பயிர் கண்காணிப்பு, உரம் மற்றும் பயிர் பாதுகாப்பு மருந்துகள் தெளித்தல் போன்ற பணிகளை விரைவாகவும் திறமையாகவும் மேற்கொள்ள உதவும் நவீன தொழில்நுட்பமாகும்.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

## முக்கிய பயன்பாடுகள்



1. பூச்சிக்கொல்லி மற்றும் பூஞ்சைக்கொல்லி மருந்து தெளித்தல் – குறைந்த நேரத்தில் அதிக பரப்பளவில் சீராக தெளிக்கலாம்.
2. திரவ உரம் தெளித்தல் – பயிரின் தேவைக்கேற்ப இலைவழி ஊட்டச்சத்துகளை வழங்க உதவும்.
3. பயிர் கண்காணிப்பு – கேமரா மற்றும் சென்சார்கள் மூலம் பயிர்களின் வளர்ச்சி மற்றும் பாதிப்புகளை கண்டறியலாம்.
4. பூச்சி மற்றும் நோய் கண்டறிதல் – ஆரம்ப நிலையிலேயே பாதிக்கப்பட்ட பகுதிகளை அடையாளம் காண உதவும்.
5. நேரம் மற்றும் தொழிலாளர் செலவு குறைப்பு – மனித உழைப்பைக் குறைத்து வேலையை விரைவாக முடிக்க உதவுகிறது.
6. நீர் மற்றும் மருந்து பயன்பாட்டில் திறன் – சரியான அளவில் தெளிப்பதன் மூலம் வீணாவதை குறைக்க முடியும்.
7. உயரமான அல்லது அடர்த்தியான பயிர்களில் பயன்பாடு – தொழிலாளர்கள் உள்ளே சென்று தெளிக்க சிரமமான வயல் களிலும் உதவியாக இருக்கும்.

## ட்ரோன் தெளிப்பின் நன்மைகள்

1. குறுகிய நேரத்தில் அதிக பரப்பளவு
2. பயிர் சேதம் குறைதல்
3. தொழிலாளர் தேவையை குறைத்தல்
4. தெளிப்பு பணியில் ஒரே மாதிரியான பயன்பாடு
5. விவசாயிகளின் உற்பத்தித் திறனை மேம்படுத்த உதவும்

மேலும் வட்டார தொழில்நுட்ப மேலாளர் சுனில்குமார் பேசுகையில் டிரோன் பயன்பாடு செயல்விளக்கம் அளித்து முக்கியத்துவம் குறித்தும் விளக்கி கூறினார். இந்த பயிற்சியில் கலந்துக்கொண்ட அனைத்து விவசாயிகளுக்கும் சிறுண்டி மற்றும் உணவு வழங்கப்பட்டது. வேளாண் கண்காட்சியாக உயிர் உரங்கள், நெல், நுன்னுட்ட கலவைகள், பார்வைக்கு வைக்கப்பட்டு அதன் முக்கியத் துவத்தினை பற்றியும் உயிர் உரத்தின் மூலம் விதை நேர்த்தி செய்தல் குறித்தும் உதவி தொழில்நுட்ப மேலாளர் எடுத்து கூறினார். மேலும் இந்த பயிற்சிக்கு கருத்துக்காட்சிக்கு தேவையான அனைத்து ஏற்பாடுகளையும் உதவி தொழில்நுட்ப மேலாளர் பிட்டார் பிரான்ஸ் பாபு மற்றும் அழகுசெல்வன் செய்தனர்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

சிறப்புச்சலுகை



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

## வகை வகையான சூப் தொடர்...

# சூப் செய்வது எப்படி?

**25. முட்டை டிராப் சூப்**

**தேவையான பொருட்கள்**

முட்டை - 2

மிளகு தூள் - ½ டீஸ்பூன்

சோள மாவு - 1 டீஸ்பூன்

உப்பு - தேவைக்கேற்ப

தண்ணீர் - 3 கப்

**செய்முறை :** தண்ணீரை கொதிக்கவிட்டு சோள மாவு கரை சலை சேர்க்கவும். பின்னர் அடித்த முட்டையை மெதுவாக ஊற்றி கிளறி, மிளகு தூள் மற்றும் உப்பு சேர்த்து சூடாக பரிமாறவும்.

தொகுப்பு : *G.சுரேஷ்குமார், ஆசிரியர் ஓய்வு, கோவில்பட்டி.*

நாளை தொடரும்...



# ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மை மூலம் இரசாயண உரங்களின் பயன்பாட்டை குறைத்தல் பயிற்சி



மதுரை, ஆக.28

மதுரை மாவட்டம், அலங்காநல்லூர் வட்டாரம், வேளாண்மை தொழில் நுட்ப மேலாண்மை முகமை திட்டத்தின் கீழ் கள்வேலிப்பட்டி கிராமத்தில் 27.08.26ம் தேதி அன்று ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மை மற்றும் இரசாயண உரங்களின் பயன்பாட்டைக் குறைத்தல் குறித்த மாவட்ட அளவிலான விவசாயிகள் பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியில் சுமார் 40 முன்னோடி விவசாயிகள் கலந்து கொண்டனர்.

இப்பயிற்சியில் அலங்காநல்லூர் வேளாண்மை உதவி இயக்குநர் பெ.தெய்வேந்திரன், ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மை மற்றும் இரசாயண உரங்களின் பயன்பாட்டைக் குறைத்தலின் முக்கியத்துவம் மற்றும் சமச்சீரான உரப்பயன்பாட்டை மேற் கொள்வதன் மூலம் நிலையான வேளாண்மையை ஊக்குவித்தல், மண் ஆரோக்கியத்தை மேம்படுத்துதல், மண்வளம் மற்றும் சமச்சீரான உரப்பயன்பாட்மை மேற்கொள்வதன் மூலம் சாகுபடி செலவை குறைப்பது, காலநிலை மாற்றத்தை எதிர்கொள்வது, பசுந்தாள் உரப்பயன்பாடுகள் குறித்தும் எடுத்துரைத்து அனை வரையும் வரவேற்றார். மேலும் வேளாண்மை அறிவியல் நிலைய முதுநிலை விஞ்ஞானி/ திட்ட ஒருங்கிணைப்பாளர் டாக்டர்.சுரேஷ், ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மை முறைகளான தழைச்சத்து, சாம்பல்சத்து, மணிச்சத்து முறைகள், இரண்டாம் துணை நிலை சத்துக்கள், நுண்ணூட்டச்சத்துகள் எவ்வாறு பயிர் களுக்கு இடுவது பற்றியும் அதன் பயன்பாட்டு நன்மைகள் குறித்த தொழில்நுட்பங்கள், ஊட்டச்சத்து பற்றாக்குறைகள் மற்றும் அதன் நிவர்த்தி முறைகள், மண்மாதரி எடுத்தல், மண் பரிசோதனை, மண் பரிசோதனை முக்கியத்துவம், மண்வளம் மேம்பாடு, சமச்சீர் உர மேலாண்மை, உயிர் உரங்களின் பயன்கள் பசுந்தாள் மற்றும் பசுந்தழை உரங்களின் பயன்பாடுகள், பஞ்சகாவ்யம், மீன் அமினோ அமில கரைசல், மஞ்சள் வண்ண அட்டை, விளக்கு பொறி, இனக்கவர்ச்சி பொறி, வேப்பங்கொட்டை கரைசல் தெளிப்பு, விளக்கு பொறி, இயற்கை திரவ உயிர் உரங்களான திரவ அசோஸ் பைரில்லம், பாஸ்போபாக்டீரியா ரைசோபியம், ஆகியவற்றினை பயன்படுத்துமாறும் முக்கியமாக விவசாயிகள் அனைவரும் சான்று

பெற்ற விதைகளை பயன்படுத்தி குறைந்த செலவில் அதிக மகசூல் பெற்றிடலாம் என தொழில்நுட்பக் கருத்துக்களை விவசாயிகளுக்கு தெளிவாக எடுத்துரைத்து விவசாயிகள் கேட்ட அனைத்து கேள்வி களுக்கும் உரிய முறையில் விளக்கமளித்தார்.


அலங்காநல்லூர் வட்டார வேளாண்மை அலுவலர் மு.வசந்தகுமார் வேளாண்மை விரிவாக்க மையத்தில் உள்ள இடுபொருட்களின் மானிய விவரங்கள் மற்றும் விவசாயிகளின் தனித்துவ அடையாள எண் பாரத பிரதம மந்திரி கிசான் நிதி திட்டம், நுண்ணீர்ப் பாசன திட்டம், மத்திய மாநில அரசின் மூலமாக கிடைக்கும் மானியத் திட்டங்கள் பற்றி எடுத்துக் கூறினார். உதவி வேளாண்மை அலுவலர் காதர் மொகைதீன் அவர்கள் வேளாண்மைத் துறை மூலம் வழங்கப்படும் மானியத் திட்டங்கள் பற்றியும் விவசாயிகளுக்கு எடுத்துக் கூறினார்.

காந்திகிராம வேளாண் பல்கலைக்கழகத்தில் இருந்து ஊரக வேளாண்மை பணி அனுபவ திட்ட மாணவிகள் ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மை மற்றும் இரசாயண உரங்களின் பயன்பாட்டைக் குறைத்தல் குறித்து செயல்விளக்கம் மற்றும் வரைபடம் மூலமும் தொழில்நுட்ப கருத்துக்களை விவசாயிகளுக்கு எடுத்துரைத்தனர்.

விவசாயிகளுக்கு வேளாண் இடுபொருட்கள், பசுந்தாள் உரப்பயிர்கள் பற்றிய கருத்து கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டிருந் ததை விவசாயிகள் அனைவரும் பார்வையிட்டனர். பயிற்சியின் முடிவில் ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மை மற்றும் இரசாயண உரங்களின் பயன்பாட்டைக் குறைத்தல் குறித்த விவசாயிகள் பேரணி நடைபெற்றது.

பயிற்சியில் கலந்து கொண்ட விவசாயிகளுக்கும் தொழில்நுட்ப உரையாற்றிய அலுவலர்களுக்கும் அலங்காநல்லூர் வட்டார தொழில்நுட்ப மேலாளர் வேல்முருகன் நன்றி கூறினார். இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை அட்மா திட்ட உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் சௌந்தராஜன் மற்றும் வசந்தி ஆகியோர் செய்திருந்தனர்.




கல்யாண்
ஜுவல்லர்ஸ்
Toll Free No. 1800 - 4257333

# விவசாயிகள் சம்பா பருவ நெல் சாகுபடியில் அதிக மகசூல் பெற தரமான விதைகளை பயன்படுத்த வேண்டும்!

புதுக்கோட்டை, ஆக.28

வேளாண்மையின் உற்பத்திக்கு விதை அடிப்படை இடு பொருளாகும். விவசாயிகளுக்கு தரமான விதைகள் கிடைக்கச் செய்வதற்காக தமிழ்நாடு அரசு,விதைச் சான்றளிப்பு மற்றும் உயிர்மச் சான்றளிப்புத் துறையின் கீழ் விதைச் சான்றளிப்பு, விதை ஆய்வு, விதைப் பரிசோதனை, உயிர்மச் சான்றளிப்பு மற்றும் பயிற்சி ஆகிய திட்டங்களை செயல்படுத்தி வருகின்றது.

புதுக்கோட்டை மாவட்டம், திருக்கோகர்ணம், நம்பர் 30, இராம லிங்கம் தெருவில் விதைப்பரிசோதனை நிலையம் இயங்கி வருகிறது. விதையின் தரத்தை அறிய விதைப்பரிசோதனை செய்யப்படுகிறது. இப்பரிசோதனையில் முளைப்புத்திறன், புறத் தூய்மை, ஈரப்பதம் மற்றும் பிறரக கலப்பு கண்டறியப்பட்டு உடனுக்குடன் முடிவுகள் அறிவிக்கப்படுகின்றது. இவ்விதைப் பரிசோதனை நிலையத்தில் சான்று விதை, ஆய்வாளர் விதை, விவசாயிகளிடமிருந்தும், விதை விற்பனையாளர்களிடமிருந்தும், விதை உற்பத்தியாளர்களிடமிருந்தும் பெறப்படும் பணி விதை மாதிரிகளும் ஆய்வு செய்யப்பட்டு வருகின்றது. மாவட்டத்தில் சம்பா பருவத்திற்கேற்ற நெல் ரகங்களான ஏடீடி-38, ஏடீடி-39, ஏடீடி-54, ஏ.எஸ்டி-19, ஐ.ஆர் 20, வெள்ளைப் பொன்னி, சம்பா மசூரி, நெல்லூர் மசூரி மற்றும் ஆர்.என்.ஆர் 15048 ஆகிய ரகங்கள் பரவலாக சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. சம்பா சாகுபடியில் அதிக மகசூல் பெற விவசாயிகள் தங்களது கைவசம் உள்ள நெல் விதை களை விதைக்கும் சூழ்நிலையில் விதைக்க உள்ள விதையில் முளைப்புத்திறன் குறைந்தபட்சம் 80%, புறத்தூய்மை 98%, அதிக பட்ச ஈரப்பதம் 13%, பிறரக கலவன் ஆதார விதைக்கு 0.05%. சான்று விதைக்கு 0.2% உள்ளதா? என்பதை அறிந்து விதைப்பு செய்தால் நெல் சாகுபடியில் அதிக மகசூல் பெற வாய்ப்புள்ளது. எனவே விவசாயிகள் தங்களது கைவசம் உள்ள நெல் விதைகளின் முளைப்புத்திறன், புறத்தூய்மை, ஈரப்பதம் மற்றும் பிற இரகக் கலவன் பிற பயிர் விதை அளவு அறிய 50 கிராம் விதையினை துணிப்பையில் இட்டு மேலும் ஈரப்பதம் அறிய தனியே 50 கிராம் அளவு விதைகளை காற்று புகாத பாலிதீன் பைகளில் இட்டு பயிர் இரகம் தேவையான ஆய்வு விபரங்களை குறிப்பிட்டு மேற்கண்ட முகவரியில் மாதிரிகளைக் கொடுத்து, மாதிரிக்கு ரூ.80/- மட்டும் செலுத்தி விதைகளை பரிசோதனை செய்து தரமான விதை களை பயன்படுத்தி அதிக மகசூல் பெற வேண்டுமாறு மூத்த வேளாண்மை அலுவலர் செ.சுமித்ரா தேவி மற்றும் வேளாண்மை அலுவலர் மா.செல்வம் ஆகியோர் கேட்டுக் கொண்டனர்.

# உரம் கூடுதல் விலைக்கு விற்றால் நடவடிக்கை

## வேளாண்மை இணை இயக்குநர் எச்சரிக்கை!

திருச்சி, ஆக.28

திருச்சி மாவட்டத்தில் விவசாயிகளுக்குத் தேவையான உரங்கள் உரிய நேரத்தில், அரசு நிர்ணயித்த விலையில், தட்டுப் பாடின்றி கிடைப்பதை உறுதி செய்யும் வகையில் உர விற்பனை நிலையங்கள் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகின்றன.

உரங்களை MRP-ஐ விட கூடுதல் விலைக்கு விற்பனை செய்யக் கூடாது. உரத்துடன் தேவையற்ற பிற பொருட்களை வாங்குமாறு விவசாயிகளை கட்டாயப்படுத்தக்கூடாது. உரங் களின் இருப்பு மற்றும் விலைப்பட்டியல் விவரங்களை விற்பனை நிலையங்களில் தெளிவாக காட்சிப்படுத்த வேண்டும். உர விற்பனைகள் அனைத்தும் PoS இயந்திரம் மூலம் முறையாக மேற்கொள்ளப்பட்டு, விவசாயிகளுக்கு ரசீது கட்டாயம் வழங்கப்பட வேண்டும். விற்பனை செய்யப்பட்ட உரங்களுக் கான ரசீது விவரங்கள் உரிய பதிவேட்டில் முறையாகப் பதிவு செய்து பராமரிக்கப்பட வேண்டும். கடையின் உண்மை இருப்பு, இருப்புப் பதிவேடு மற்றும் PoS இருப்பு ஆகியவை ஒன்றுக் கொன்று சரியாகப் பொருந்த வேண்டும். விவசாயிகளின் பயிர் மற்றும் தேவைக்கேற்ப உரங்கள் முறையாக விநியோகம் செய்யப்பட வேண்டும். ஒரே நபருக்கு தேவைக்கு அதிகமாக உரம் விற்பனை செய்வதைத் தவிர்க்க வேண்டும். உரங்களை பதுக்குதல், அனுமதியின்றி வேறு இடத்திற்கு மாற்றுதல் மற்றும் முறைகேடாக விற்பனை செய்தல் கூடாது.

கூடுதல் விலை, இணைப்பு விற்பனை, ரசீது வழங்காமை, இருப்பு வேறுபாடு உள்ளிட்ட விதிமீறல்கள் கண்டறியப்பட்டால் Fertiliser (Control) Order, 1985 விதிகளின்படி உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

உர விற்பனையாளர்கள் தங்களது உரிமம் காலாவதியாகும் முன்பே புதுப்பித்துக் கொள்ள அறிவுறுத்தப்படுகிறது. கால தாமதம் ஒரு மாதத்திற்கு மேல் ஆகுமானால் உர உரிமம் இரத்து செய்யப்படும். விவசாயிகளின் நலனைப் பாதுகாத்து, தரமான உரங்கள் சரியான விலையில், சரியான நேரத்தில் தடையின்றி கிடைப்பதை உறுதி செய்வோம்.

# நெல் வயலில் பாசி பாதிப்புகளும் கட்டுப்பாட்டு முறைகளும்



## பாசி என்றால் என்ன?

நெல் வயலில் அதிக ஈரப்பதம், தேங்கிய நீர், அதிக சூரியஒளி மற்றும் ஊட்டச் சத்துக்கள் கிடைக்கும் சூழலில் பச்சைப் பாசி வேகமாக வளரக்கூடும். வயலின் நீர்மட்டத்தில் பாசிப்படலம் உரு வாகி, நெல் நாற்றுகளின் இயல்பான வளர்ச்சியைப் பாதிக்கலாம்.

## பாதிப்புகள்

நெல் நாற்றுகளுக்குக் கிடைக்கும் ஒளி மற்றும் காற்று பரிமாற்றம் குறையும். மண் மேற்பரப்பில் பாசிப் படலம் உருவாகி வேர் வளர்ச்சியைத் தடுக்கலாம். நாற்றுகள் பலவீனமடைந்து வளர்ச்சி குன்றக்கூடும்.

நீர் மற்றும் ஊட்டச்சத்துகளுக்கான போட்டி ஏற்படலாம். பாசி அதிகமாக இருந்தால் வயல் பராமரிப்பு மற்றும் நடவு பணிகள் சிரமமாகும்.

## பாசியை அகற்றும் முறை

பாசி குறைவாக இருந்தால் கை முறையில் அல்லது வலை/கருவி மூலம் அகற்றி வயலுக்கு வெளியே கொண்டு செல்லவும். வயலில் நீர் தேங்குவதைத் தவிர்த்து, தேவைக்கேற்ப நீர் வடிகட்டலைச் செய்யவும்.

பாசி மீண்டும் அதிகமாக உருவாகாதவாறு நீர்மட்டத்தை முறையாகப் பராமரிக்கவும். உரங்களை பரிந்துரைக்கப்பட்ட அளவு மற்றும் சரியான முறையில் பயன்படுத்தவும்.

## கட்டுப்படுத்துவதால் கிடைக்கும் நன்மைகள்

நெல் நாற்றுகளுக்கு போதிய ஒளி, காற்று மற்றும் இடவசதி கிடைக்கும். வேர் மற்றும் தண்டு வளர்ச்சி மேம்படும்.

வயல் பராமரிப்பு எளிதாகும். நீர் மற்றும் ஊட்டச்சத்துகளின் பயன்பாடு சீராகும். ஆரோக்கியமான நெல் வளர்ச்சிக்கும் நல்ல மகசூலுக்கும் உதவும்.

**விவசாயிகளுக்கான முக்கிய குறிப்பு :** பாசி காணப்பட்டவுடன் காரணத்தை அறிந்து முதலில் நீர் மேலாண்மை மற்றும் கைமுறை அகற்றுதல் போன்ற ஒருங் கிணைந்த முறைகளைப் பின்பற்றுவது நல்லது. தேவையற்ற இரசாயனப் பயன்பாட்டைத் தவிர்த்து, வேளாண் அலுவலரின் பரிந்துரையுடன் மட்டுமே கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும்.

தகவல் : ***ஹஸ்வத்தா பத்மராஜ், அருந்ததி, கவிதாஞ்சலி, ஹர்ஷினி, ஹரிணி, மௌனிகா, நான்காம் ஆண்டு மாணவர்கள், வேளாண்மை மற்றும் கால்நடை அறிவியல் பள்ளி, காந்தி கிராம கிராமியப் பல்கலைக்கழகம், திண்டுக்கல்.***



# சோலார் பேனல் ஆயுட்காலம் எவ்வளவு தெரியுமா?




அதிகரித்து வரும் மின்சார கட்டணங்கள் மற்றும் தூய்மையான ஆற்றலுக்கான தேவை அதிகரித்து வரும் நிலையில், இந்தியாவில் சூரிய மின்தகடுகள் பிரபலமாகி வருகிறது. கூரைகள் பெரிய அளவிலான தொழிற்சாலைகள் மற்றும் சூரிய மின் பூங்கா என எங்கு பார்த்தாலும் சூரிய ஆற்றலின் பயன்பாடு தொடர்ந்து அதிகரித்து வருகிறது. இருப்பினும் பொதுவான கேள்வி நமக்கெல்லாம் எழுகிறது. சூரிய மின்சார தகடுகள் (SOLAR PANELS) எப்போதும் ஒரே அளவு மின்சாரத்தை உற்பத்தி செய்கின்றனவா? இவை எவ்வளவு காலம் நீடிக்கும்? மற்றும் காலபோக்கில் அவற்றின் செயல் திறன் ஏன் குறைகிறது? என்ற கேள்விக்கான பதிலை கீழே விரிவாக பார்ப்போம்.

## ஒரு சூரிய மின் தகடு எவ்வளவு காலம் நீடிக்கும்?

பெரும்பாலான நவீன சூரிய மின் தகடுகளின் சராசரி ஆயுட் காலம் 25 முதல் 30 ஆண்டுகள் என கருதப்படுகிறது. இதன் பொருள் 30 ஆண்டுகளுக்கு பிறகு அந்த தகடுகள் திடீரென செயல்படுவதை நிறுத்தி விடும் என்பதல்ல. அதற்கு பிறகும் கூட தொடர்ந்து மின்சாரத்தை உற்பத்தி செய்கின்றன. இருப்பினும் அவை புதியதாக இருந்த போது இருந்தைவிட அவற்றின் மின் உற்பத்தி திறன் குறைகிறது. பல சந்தர்ப்பங்களில், உயர் தர சூரிய ஒளி மின் தகடுகள் 35 முதல் 40 ஆண்டுகள் வரை பயன்பாட்டில் இருக்கின்றன. இருப்பினும் அவற்றின் செயல்திறன் படிப்படியாக குறைகிறது.

## ஆண்டு தோறும் திறன் எவ்வளவு குறைகிறது?

சூரிய மின் தகடுகள் காலப்போக்கில் தரம் குறைகின்றன, அதாவது மின்சாரம் உற்பத்தி செய்யும் அவற்றின் திறன் ஒவ்வொரு ஆண்டும் சிறதளவு குறைகிறது. உயர்தர மோனோ கிரிஸ்டலின் தகடுகளுக்கு ஆண்டு சரிவு பொதுவாக 0.3% முதல் 0.5% வரை இருக்கும், அதே சமயம் சாதாரண தரத்திலான தகடுகளுககு இது ஆண்டுக்கு 0.5% முதல் 0.8% வரை இருக்கலாம்.

எடுத்துக்காட்டாக, உங்களிடம் 5வழ சூரிய மின் அமைப்பு ஒன்று இருந்து, அதன் செயல்திறன் ஆண்டுக்கு 0,5%குறைந்தாலும் 25 ஆண்டுகளுக்கு, பிறகும்கூட அதன் செயல் திறன் சுமார் 87% முதல் 88% வரை நிலைத்திற்கலாம். இதன் பொருள் அது முன்பை விட குறைவான மின்சாரத்தை உற்பத்தி செய்யும். ஆனால் அது முற்றிலும் பயனற்றதாகி விடாது.

**செயல் திறன் ஏன் குறைகிறது?**

சூரிய மின் தகடுகள் தொடர்ந்து சூரிய ஒளி, வெப்பம், மழை, தூசி மற்றும் மாறிவரும் வானிலைக்கு உட்படுகின்றன. இதனால் தான் காலப்போக்கில், அவற்றின் செயல் திறன் குறைய தொடங்குகிறது.

**திறன் இழப்பிற்கான முக்கிய காரணம் என்ன?**

ஒரு சூரிய அமைப்பு என்பது வெறும் பேனல்களை பற்றியது மட்டுமல்ல, இன்வெர்ட்டர் மற்றும் பேட்டரிகளும் முக்கிய பங்கு வகிக்கின்றன. ஒரு சோலார் இன்வெர்ட்டரின் சாரசரி ஆயுட்காலம் 10 முதல் 15 ஆண்டுகள் தான். லித்தியம் பேட்டரிகளின் ஆயுள் காலம் 10 ஆண்டுகள், அதே சமயம் லெட் ஆசிட் பேட்டரியின் ஆயுள்காலம் 5 முதல் 7 ஆண்டுகள். முழு ஆயுட்காலத்தில் இன்வெர்ட்டர் & பேட்டரிகளை (BATTARY) ஒன்று அல்லது இரண்டு முறை மாற்ற வேண்டியதாக இருக்கும்.

**சோலார் பேனலின் ஆயுட்காலம் நீட்டிக்க என்ன செய்ய வேண்டும்.?**

1) பேனல்களை அவ்வப்போது சுத்தம் செய்ய வேண்டும்.

2) மரங்கள், கட்டிடங்களின் நிழல்களிலிருந்து பாதுகாக்க வேண்டும்.

3) உயர்தர சான்றளிக்கப்பட்ட பேனல்களை பயன்படுத்த வேண்டும்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**



# கால்நடை பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தில் ஆடு வளர்ப்பு தொழில் முனைவோர் பயிற்சி

திண்டுக்கல், ஆக.28

திண்டுக்கல் ஆட்சியர் வளாகத்தில் அமைந்துள்ள கால்நடை பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தில் ஆடு வளர்ப்பு தொழில் முனைவோர் பயிற்சி வெள்ளிகிழமை நடைபெற்றது. பயிற்சி முகாமிற்கு கால்நடை ஆராய்ச்சி மையத்தின் தலைவர் முனைவர் மு.ச.முருகன் தலைமை வகித்து இன்றைய சுழலில் வெள்ளாடு வளர்ப்பு தொழில், பண்ணையாளர்கள் எதிர் கொள்ளும் இடர்பாடுகள் & சவால்கள், செம்மறி மற்றும் வெள்ளாடு வளர்ப்பில் தொழில் முனைவோருக்கான வாய்ப்புகள் பற்றி விளக்கினார்.

தொடர்ந்து சிறப்பு விருந்தினராக தேனி, கால்நடை மருத்துவக் கல்லூரியில் இருந்து உதவிப்பேராசிரியர் த.சந்திரசேகர் கலந்து கொண்டு ஆடுககளின் இனங்கள், அவற்றை தேர்வு செய்யும் முறை, கொட்டகை அமைப்பது, தீவன மேலான்மை, இனப் பெருக்க மேலாண்மை குறித்து விளக்கினார் மற்றும் கால்நடை ஆராய்ச்சி மையம், ராஜபாளையத்திலிருந்து தலைவர் முனைவர் வி.ராமகிருஷ்ணன் கலந்து கொண்டு நோய் மேலாண்மை, ஆடுகளில் மரபு சார் மூலிகை மருத்துவம், கால்நடைகளில் அரசு மானிய திட்டங்கள் குறித்து விரிவாக கூறினார். தொடர்ந்து விவசாயிகளின் கேள்விகளுக்கு துறை சார்ந்த வல்லுனர்கள் விளக்கம் அளித்தனர். இதில் திண்டுக்கல், மதுரை, தேனி, கரூர் மற்றும் நாமக்கல் உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் இருத்து 30 பேர் கலந்து கொண்டனர்.

அவர்களுக்கு பங்கேற்ப்பு சான்றிதழ், பயற்சி புத்தகம், உணவு வழங்கப்பட்டன. வரும் செப்டம்பர் மாதம் கறவை மாடு வளர்ப்பு மற்றும் கோழி வளர்ப்பு பயிற்சிகள் நடைபெற உள்ளது.

இந்த பயிற்சிக்கு ரூ.590/- கட்டணம் செலுத்தி முன்பதிவு செய்ய வேண்டும். மேலும் தகவலுக்கு திண்டுக்கல் காலநடை பயிற்சி மையத்தின் தொலைபேசி எண்ணை 0451 - 2904041 அழைக்கவும் என்று மையத்தின் இணைப்பேராசிரியர் மற்றும் தலைவர் கூறினார்.

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்** நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்** ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்** தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்**–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்** அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக** ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING** விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்** ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

**PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK**

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
Rithvik Pipe Company, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
Rithvik Pipe Company, Opp Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# மண்ணின் ஆரோக்கியக் கண்ணாடி - மண் என்சைம்கள்




## அறிமுகம் (Introduction)

மண் என்பது தாவரங்கள் வளர்வதற்கான அடிப்படை வளமாகும். பயிர்களுக்கு தேவையான ஊட்டச்சத்துக்கள், நீர் மற்றும் நுண்ணுயிரிகளின் வாழ்விடமாக மண் செயல்படுகிறது. மண்ணின் தரம் மற்றும் வளத்தை அறிந்து, அதை பாதுகாப்பது நிலையான வேளாண்மைக்கு மிகவும் அவசியம். மண் ஆரோக்கியத்தை மதிப்பிட பல்வேறு முறைகள் உள்ளன. அவற்றில் மண் என்சைம் களின் செயல்பாட்டை ஆய்வு செய்வது மிகவும் துல்லியமான மற்றும் நம்பகமான உயிரியல் குறியீடாக கருதப்படுகிறது.

## மண் என்சைம் என்றால் என்ன?

மண்ணில் வாழும் நுண்ணுயிரிகள், தாவர வேர்கள் மற்றும் சில மண் உயிரினங்கள் வெளியிடும் சிறப்பு புரதங்களே மண் என்சைம்கள் ஆகும். இவை மண்ணில் உள்ள கரிமப்பொருட்களை சிதைத்து, தாவரங்கள் எளிதில் எடுத்துக் கொள்ளக்கூடிய ஊட்டச்சத்துகளாக மாற்றுகின்றன.

## மண் ஆரோக்கியம் என்றால் என்ன?

மண் தனது இயற்கை தன்மையை இழக்காமல், பயிர்களின் வளர்ச்சிக்கு தேவையான ஊட்டச்சத்துக்களை வழங்கி, நீரை சேமித்து, நுண்ணுயிர்களின் செயல்பாட்டை ஆதரிக்கும் திறனே மண் ஆரோக்கியம் ஆகும்.

## முக்கிய மண் என்சைம்கள்

### 1. யூரியேஸ் (Urease)

யூரியாவை அமோனியாவாக மாற்றுகிறது. நைட்ரஜன் சுழற்சியில் முக்கிய பங்கு வகிக்கிறது. மண்ணில் நைட்ரஜன் கிடைப்பதை அதிகரிக்கிறது.

**2. பாஸ்படேஸ் (Phosphatase)**

கரிம பாஸ்பரஸை தாவரங்கள் உறிஞ்சக்கூடிய பாஸ்பேட்டாக மாற்றுகிறது. பாஸ்பரஸ் கிடைப்பை மேம்படுத்துகிறது.

**3. டீஹைட்ரஜினேஸ் (Dehydrogenase)**

மண்ணில் உள்ள நுண்ணுயிர்களின் செயல்பாட்டைக் காட்டும் முக்கிய உயிரியல் குறியீடு. மண் உயிருடன் உள்ளதா என்பதை அறிய உதவுகிறது.

**4. β–குளுக்கோசிடேஸ் (Beta-glucosidase)**

கரிமக் கழிவுகளை சிதைத்து கார்பன் சுழற்சியை மேம்படுத்து கிறது. மண்ணில் கரிமப் பொருட்கள் சிதைவதை ஊக்குவிக்கிறது.

**மண் என்சைம்கள் ஏன் முக்கியம்?**

மண் வளத்தை மதிப்பிட உதவுகின்றன. ஊட்டச் சத்து சுழற்சியை வேகப்படுத்துகின்றன. நுண்ணுயிர்களின் செயல்பாட்டை வெளிப் படுத்துகின்றன. மாசுபட்ட மண்ணை கண்டறிய உதவுகின்றன. நிலையான வேளாண்மைக்கு வழிகாட்டுகின்றன.

**மண் ஆரோக்கிய மதிப்பீட்டில் பயன்பாடு**

**மண் என்சைம்களின் செயல்பாடு அதிகமாக இருந்தால் :** மண் வளமாக உள்ளது. நுண்ணுயிர்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்கும். கரிமப் பொருட்கள் சிதைவு சிறப்பாக நடைபெறும். பயிர் வளர்ச்சி மேம்படும்.

**மண் என்சைம்களின் செயல்பாடு குறைவாக இருந்தால் :** மண் தரம் பாதிக்கப்பட்டிருக்கலாம். அதிக வேதியியல் உரங்கள் அல்லது பூச்சிக்கொல்லி பயன்பாடு காரணமாக இருக்கலாம். கரிமப் பொருட்களின் அளவு குறைந்திருக்கலாம்.

**மண் என்சைம்களை பாதிக்கும் காரணிகள்**

மண்ணின் pH, ஈரப்பதம், வெப்பநிலை, கரிமப் பொருட்களின் அளவு, வேதியியல் உரங்கள் மற்றும் பூச்சிக்கொல்லிகள், நுண்ணுயிர்களின் எண்ணிக்கை, மண் என்சைம்களை அதிகரிக்கும் வழி முறைகள், தொழுஉரம் (FYM) பயன்படுத்துதல், கம்போஸ்ட் மற்றும் வெர்மிகம்போஸ்ட் சேர்த்தல், பசுந்தாள் உரம் பயன்படுத்துதல், பயிர் சுழற்சி முறையைபின்பற்றுதல், வேதியியல் உரங்களை அளவோடு பயன்படுத்துதல், நுண்ணுயிர் உரங்களை பயன்படுத்துதல்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

### மண் என்சைம்களின் நன்மைகள்

மண்வளம் அதிகரிக்கும். ஊட்டச்சத்து கிடைப்பு மேம்படும். நுண்ணுயிர்களின் செயல்பாடு உயரும். சுற்றுச்சூழல் பாது காக்கப்படும். நிலையான வேளாண்மை ஊக்குவிக்கப்படும். அதிக மகசூல் பெற உதவும்.

### முடிவுரை (Conclusion)

மண் என்சைம்கள் மண்ணின் உயிரியல் செயல்பாடுகளை பிரதிபலிக்கும் முக்கிய குறியீடுகளாகும். மண்ணின் உண்மையான ஆரோக்கியத்தை மதிப்பிட இவை மிகவும் பயனுள்ளதாக உள்ளன. கரிம வேளாண்மை மற்றும் இயற்கைவள மேலாண்மையில் மண் என்சைம்களின் பயன்பாடு நாளுக்குநாள் அதிகரித்து வருகிறது. எனவே, மண் என்சைம்களை அடிப்படையாகக் கொண்டு மண் ஆரோக்கியத்தை மதிப்பிடுவது எதிர்கால வேளாண்மைக்கு முக்கியமான அணுகு முறையாகும்.

### மேற்கோள்கள் (Reference)

சாந்தி, பி. & செல்வி, டி. (2022). மண்அறிவியல் (Text Book of Soil Science). தன்னம்பிக்கை பதிப்பகம், கோயம்புத்தூர்.

இந்திய வேளாண் ஆராய்ச்சி மன்றம் (ICAR). (2015). வேளாண் கையேடு (Handbook of Agriculture). நியூடெல்லி.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் (TNAU). மண்வள மேலாண்மை மற்றும் மண்ஆரோக்கியம்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் (TNAU). மண் அறிவியல் மற்றும் வேளாண் வேதியியல் துறை பாடக் குறிப்புகள்.

உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு (FAO). (2020). மண் பல்லுயிர் வளம் மற்றும் மண் ஆரோக்கியம்.

தகவல் : ***ராஜகுமாரி மல்லிகா M மற்றும் வித்ரா S. உதவிப் பேராசிரியர் (SS & AC) & நான்காம் ஆண்டு வேளாண்மை மாணவி. மண் அறிவியல் மற்றும் வேளாண் வேதியியல் துறை. இமயம் வேளாண்மை மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி. துறையூர், திருச்சி 621 206. மின்னஞ்சல் முகவரி : malligamari-appan8389@gamil.com.***



# மக்காச்சோள சாகுபடி பயிற்சி நடைபெற்றது!



சேலம், ஆக.27

சேலம் மாவட்டம், தலைவாசல் வட்டாரம், நத்தக்கரை கிராமத்தில் அட்மா (ATMA) திட்டத்தின் கீழ் மக்காச்சோள சாகுபடி தொழில் நுட்பம் குறித்த சிறப்புப் பயிற்சி வெற்றிகரமாக நடத்தப்பட்டது. வேளாண்மை உதவி இயக்குனர் வேல்முருகன் தலைமை தாங்கிய இப்பயிற்சியில், துணை வேளாண்மை அலுவலர் மணவழகன்



மக்காச்சோளப் பயிரில் படைப்புழுவை கட்டுப்படுத்த ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை மற்றும் இனக்கவர்ச்சி பொறி பயன்பாடு குறித்து விவசாயிகளுக்கு விளக்கமளித்தார். பயிற்சியாளர் பிரவீன் மக்காச்சோள சாகுபடியில் ஒருங்கிணைந்த உர, பூச்சி, நோய் மற்றும் களை மேலாண்மை முறைகள் குறித்து விரிவாக எடுத்துரைத்தார். தொடர்ந்து, உதவி வேளாண்மை அலுவலர் கார்த்திக் வேளாண்மைத் துறையின் திட்டங்கள் குறித்தும், உதவி தொழில்நுட்ப மேலாளர் ரமேஷ் உயிர் உரங்களின் பயன்கள் குறித்தும் விளக்கினர். மேலும், வட்டார தொழில்நுட்ப மேலாளர் சக்தி மக்காச்சோள பயிரில் நீரில் கரையும் உரங்களின் பயன்பாடு குறித்தும், உதவி வேளாண்மை அலுவலர் பிரகாஷ் விவசாய அடையாள எண் பதிவு செய்தலின் முக்கியத்துவம் குறித்தும் எடுத்துரைத்தனர். அட்மா திட்டத்தின் செயல்பாடுகள் குறித்து உதவி தொழில்நுட்ப மேலாளர் முத்துவேல் விளக்கினார்.

## கரும்பு சாகுபடியில் ஆற்றல் சேமிப்பு குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்திய வேளாண் கல்லூரி மாணவிகள்



ஈரோடு, ஆக.27

ஈரோடு மாவட்டத்தில் கிராமப்புற வேளாண் அனுபவத் திட்டத்தின் கீழ், காந்திகிராம கிராமிய நிகர்நிலைப் பல்கலைகழக மாணவிகள் விவசாயிகளிடையே கரும்பு சாகுபடியில் வளங்களைச் சிக்கனமாகப் பயன்படுத்தி ஆற்றல் சேமிப்பது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தினர். லேகா ஸ்ரீ, திரிதா, நிஷா பார்ஜோ, ஆனந்தி, நதியா மற்றும் கவிவர்ஷினி ஆகிய மாணவிகள் விவசாயிகளுடன் கலந்துரையாடி, கரும்பில் வளையக் குழி முறையின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தனர். வளையக் குழி முறையில் கரும்புச் செடிகளுக்கு தேவையான நீர் மற்றும் ஊட்டச்சத்துக்களைச் சீராக வழங்குவதன் மூலம் நீர், உரம் மற்றும் வேளாண் பணிகளுக்கான ஆற்றலைச் சேமிக்க முடியும் என மாணவர்கள் விளக்கினர். மேலும், மண்ணில் ஈரப்பதத்தைப் பாதுகாத்து, நீரின் பயன்பாட்டைத் திறம்படக் குறைப்பதன் மூலம் உற்பத்திச் செலவைக் குறைக்க முடியும் என்பதையும் எடுத்துக் கூறினர். விவசாயிகள் தங்களது நிலத்தின் தன்மைக்கு ஏற்ப வளையக் குழி முறையைப் பின்பற்றி, நீர் மற்றும் ஆற்றல் வளங் களைச் சிக்கனமாகப் பயன்படுத்தி நிலையான வேளாண்மையை மேற்கொள்ள வேண்டும் என மாணவர்கள் வலியுறுத்தினர்.

# மண்வள மேலாண்மை குறித்து விவசாயிகள் பயிற்சி



புதுக்கோட்டை, ஆக.28

புதுக்கோட்டை மாவட்டம், பொன்னமராவதி வட்டாரம், வேளாண்மை துறையின் கீழ் செயல்பட்டு வரும் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை (அட்மா) திட்டத்தின் கீழ் ஒலியமங்கலம் கிராமத்தில் விவசாயிகளுக்கு மண் வள மேலாண்மை குறித்த பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சிக்கு வேளாண்மை உதவி இயக்குனர் ரஹ்மத் நிஷா பேகம் தலைமை வகித்தார்.

இப்பயிற்சியில் பாலமுருகன் (வேளாண் விஞ்ஞானி) வேளாண் அறிவியல் மையம், வம்பன், மண்வள மேலாண்மை என்பது மண்ணின் தரத்தை பாதுகாத்து அதிகப்படியான ரசாயன உர பயன்பாட்டைத் தவிர்த்து, விவசாய விளைச்சலை மேம்படுத்தும் எனக் கூறினார். மேலும், விவசாய நிலத்தில் மண் பரிசோதனை செய்து தேவையின் அடிப்படையில் மட்டும் உரங்களை இட வேண்டும் எனவும், அதிகப்படியான ரசாயன உரப் பயன்பாடு மண் வளத்தைக் குறைக்கும் என்பதால் அதைத் தவிர்க்க வேண்டும் எனவும், பஞ்சகாவியா, ஜீவாமிர்தம், தசகாவ்யா, மீன் அமிலம், அசோஸ்பைரில்லம், ரைசோபியம், பாஸ்போபாக்டீரியா போன்ற உயிர் உரங்களைப் பயன்படுத்தி விதை நேர்த்தி செய்வதாலும், நாற்றங்கால், நடவு வயல், நேரடி வயலில் இடுதல், நீர் வழி உரமிடுதல் போன்ற முறைகளில் பரிந்துரைப்படி இட வேண்டும் எனவும் எடுத்துரைத்தார். இதனைத் தொடர்ந்து, வேளாண்மை உதவி இயக்குநர் பொன்னமராவதி ரஹ்மத் நிஷா பேகம், மண் பரிசோதனை மேற்கொள்ளும் முறைகள் குறித்தும், மண் வளம் காத்திட இயற்கை உரங்களான தொழு உரம், கம்போஸ்ட், பசுந்தாள் உரங்கள், மண்புழு உரம் மற்றும் தென்னை நார்க்கழிவுகளை பயன்படுத்தி விவசாயிகள் பலனடையுமாறு கூறினார். மேலும், வேளாண்மை அரசு மானியத் திட்டங்களான விரிவாக எடுத்துரைத் தார். மேலும், இப்பயிற்சியில் முன்னோடி மற்றும் இயற்கை விவசாயி முத்துச்சாமி, இயற்கை உரங்கள் தயாரிக்கும் முறைகள், உயிர்ம வேளாண்மை பற்றி விரிவாக எடுத்துரைத்தார், உயிர்ம வேளாண் மூலம் மண் வளத் தினை மேம்படுத்துவதை விரிவாக எடுத்துரைத்தார். மேலும் இராசாயன உரங்களை குறைத்து இயற்கை உரங்கள் (அமிர்த கரைசல், பஞ்ச காவியா, மீன் அமிலம் மற்றும் மூலிகை அமிலங்கள்) தயாரிக்கும் மற்றும் பயன்படுத்தும் முறையினையும் அதன் பயன்களையும் விரிவாக எடுத்துரைத்தார்.

அனைத்து விவசாயிகளையும் தங்களது நிலங்களை தரவு தளத்தில் உழவர் அடையாள அட்டை பதிவு செய்வதும் குறித்தும், வேளாண் மானியத் திட்டங்கள் குறித்தும் எடுத்துரைத்தார். பின்னர், முருகன், துணை வேளாண்மை அலுவலர், நிலமும் நீரும் நன்றாக இருந்தால் தான் பயிரின் வளர்ச்சியும் நல்ல மகசூலும் கிடைக்கும். பயிரின் மகசூலை அதிகரிக்க வேளாண் தொழில் நுட்பங்களாகிய மண் வளம் அறிந்து குறைந்த செலவில் நிறைந்த மகசூல் பெற ஒருங்கிணைந்த உர மேலாண்மை உத்திகளை செயல்படுத்து வதாலும், தேவையறிந்து அதற்கேற்ப நுண்ணூட்ட உரமிடுவ தாலும், நிலச்சீர்திருத்தம் மற்றும் மேலாண்மை தொழில்நுட்பத் தினை செயல்படுத்துவதாலும் மண் வளத்தினை பாதுகாத்து மகசூலை அதிகப்படுத்தலாம் என விவசாயிகளுக்கு எடுத்துரைத்தார்.

இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை வட்டார தொழில்நுட்ப மேலாளர் சத்தியபாமா மற்றும் உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் முறையே பிரசாத், நவீன்குமார் செய்திருந்தனர். இப்பயிற்சியில் 40 விவசாயிகள் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.

# நெல் வயல் வெளிப்பள்ளி



பெரம்பலூர், ஆக.28

பெரம்பலூர் மாவட்டம், ஆலத்தூர் வட்டாரம், அழகிரிப்பாளையம் கிராமத்தில் மத்திய ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு மையம், திருச்சி சார்பில் விவசாயிகளுக்கான நெல் வயல் வெளிப்பள்ளியின் துவக்க விழா நடைபெற்றது. நிகழ்ச்சியில் துவக்க உரையாற்றிய முனைவர் இரா. கோவிந்தராஜ், பயிர் பாதுகாப்பு அலுவலர், மத்திய ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு மைய செயல்பாடுகள், வயல்வெளிப் பள்ளியின் நோக்கம் மற்றும் பூச்சிக் கொல்லியினால்ஏற்படும் தீமைகள் பற்றி விரிவாக எடுத்துரைத்தார். இதனை தொடர்ந்து னி.அமுதா, பயிர் பாதுகாப்பு அலுவலர், பயிற்சியை பற்றி தெளிவாக எடுத்துரைத்தார். இந்த பயிற்சியானது வாரம் ஒரு முறை நெல்லில் உள்ள அனைத்து விதமான பயிர் பாதுகாப்பு சார்ந்த பிரச்சனைகள், விதை நேர்த்தி, மண் பரிசோதனை, உரநிர்வாகம், நீர் நிர்வாகம், அறுவடைக்கு பிந்தைய தொழில்நுட்பம் அனைத்தும் விரிவாக விவாதிக்கப்படும் எனக்கூறினார். துவக்க விழாவின் நிறைவில் ராஜேஸ்வரி, உதவி பயிர் பாதுகாப்பு அலுவலர் பயிற்சியில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றி கூறினார். பயிற்சியில் 35 விவசாயிகள் கலந்து கொண்டனர்.

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம்
  நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள்
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள்
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள்
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன்
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

### PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

### RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# இப்கோ – விவசாயிகள் கருத்தரங்கம்

சேலம், ஆக.28

சேலம் மாவட்டம், வீரகனூரில் விவசாயிகளுக்கான கருத்தரங்கம் நடைபெற்றது. இந்நிகழ்விற்கு இப்கோ தமிழ்நாடு மாநில விற்பனை மேலாளர் ந.சுரேஷ், தலைமை வகித்தார். மேலும், இக்கருத்தரங்கில் கே.ஸ்ரீனிவாசன், இணை வேளாண்மை இயக்குநர், சேலம் வேல்முருகன், வேளாண்மை உதவி இயக்குநர், தலைவாசல் மற்றும் அப்துல் ரஹ்மான், இப்கோ கள அதிகாரி, சேலம், ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதில் வேல்முருகன், அரசின் பல்வேறு வேளாண் திட்டங்கள், மானியப் பயன்கள், வேளாண் இடுபொருட்கள் மற்றும் தலைவாசல் வேளாண்மை அலுவலகம் மூலம் கிடைக்கும் சிறப்பு இடுபொருட்கள் குறித்து விவசாயிகளுக்கு விளக்கினார். தொடர்ந்து, கே.ஸ்ரீனிவாசன், சமச்சீர் உரமிடுதல், ஊட்டச்சத்து மேலாண்மை, உரப் பயன்பாட்டுத் திறன் மற்றும் மண்வளப் பாதுகாப்பின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தார். மேலும், நவீன உரத் தொழில் நுட்பங்களைப் பயன்படுத்துவதன் அவசியத்தையும், இப்கோ நானோ உரங்களின் பயன்கள் மற்றும் முக்கியத்துவத்தையும் விளக்கினார்.

அதனைத் தொடர்ந்து, ந.சுரேஷ், மக்காச்சோளம் பயிரில் இப்கோ நானோ உரங்களின் நிலை வாரியான பயன்பாடு குறித்து விளக்கினார். நானோ டிஏபி மூலம் விதை நேர்த்தி, பயிர் வளர்ச்சிக் காலத்தில் இலை வழி பயன்பாடு மற்றும் மேலுரமிடும் நிலைகளில் நானோ உரங்களைப் பயன்படுத்துவதன் மூலம் உரப்பயன்பாட்டுத் திறனை மேம்படுத்தி, வழக்கமான உரங்களின் பயன்பாட்டைக் குறைக்க முடியும் என்பதை எடுத்துரைத்தார். மேலும், இப்கோ சங்கட் ஹரண் பீமா யோஜனா காப்பீட்டு திட்டம் குறித்தும் விழிப்புணர்வு ஏற்படுத்தினார். இறுதியாக இப்கோ எம்சி அலுவலர்கள், மக்காச்சோளம் சாகுபடிக்கு ஏற்ற இப்கோ தயாரிப்புகள், அவற்றின் பயன்பாட்டு முறைகள் மற்றும் பயன்கள் குறித்து விளக்கினர். இக்கருத்தரங்கின் மூலம் விவசாயிகளுக்கு நவீன மக்காச்சோளம் சாகுபடி முறைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப் பட்டது.



# அட்மா திட்டத்தின் கீழ் நடைபெற்ற விவசாயிகள் பயிற்சியில் வேளாண்மை இயக்குனர் பங்கேற்பு



புதுக்கோட்டை, ஆக.28

புதுக்கோட்டை மாவட்டம், அன்னவாசல் வட்டாரம், வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமையின் செயல் படுத்தப்படும் மாநில விரிவாக்கத் திட்டங்களின் உறுதுணை சீரமைப்பு திட்டத்தின் கீழ் ஈஸ்வரன்கோயில் கிராமத்தில் 27.08.26 மண்வள மேலாண்மை என்ற தலைப்பில் விவசாயிகள் பயிற்சி நடைபெற்றது.

இப்பயிற்சியில் புதுக்கோட்டை மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் எஸ்.சுந்தர மகாலிங்கம், கலந்து கொண்டு மண் வள மேலாண்மையின் முக்கியத்துவங்கள் குறித்தும் மண்வள மேலாண்மையில் விவசாயிகள் கடைபிடிக்க வேண்டிய வழி முறைகள் குறித்தும் சமச்சீர் உரம் இடுதலின் முக்கியத்துவங்கள் குறித்தும் உயிரியல் காரணிகளின் பயன்பாடுகள் குறித்தும் உழவர் செயலியின் பயன்பாடுகள் குறித்தும் விவசாயிகளுக்கு விளக்கம் அளித்தார். அதனைத் தொடர்ந்து அன்னவாசல் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் மு.மதியழகன், மண்ணில் கரிம சத்தின் முக்கியத்துவங்கள் குறித்தும் பசுந்தாள், பசுந்தழை உரங்களின் முக்கியத்துவங்கள் குறித்தும் ரசாயன உர பயன்பாட்டை குறைத்து அங்கக முறையில் சாகுபடி செய்வது குறித்தும் விவசாயிகள் அறிவுறுத்தினார். முன்னதாக குடுமியான்மலை மண் பரிசோதனை நிலைய வேளாண்மை அலுவலர் சந்தானம், மண் மாதிரி சேகரிக்கும் முறைகள் மண் ஆய்வின் முடிவுகளின் அடிப்படையில் உர மேலாண்மை, மண்ணில் உள்ள சத்துக்களின் வகைப்பாடுகள், தொழு உரங்கள் இடுவதினால் மண்ணில் ஏற்படும் மாற்றங்கள் குறித்தும் நுண்ணூட்டம் இடுதலின் முக்கியத்துவம் குறித்தும் விவசாயிகளுக்கு பயிற்சி அளித்தார்.

பின்பு குடுமியான்மலை உயிர் உர உற்பத்தி நிலைய வேளாண் அலுவலர் கருப்பையா, மண்ணில் உயிர் உரங்களின் முக்கியத் துவங்கள் பயன்பாடுகள் குறித்தும் உயிர் உரங்களை பயன்படுத்து வதால் ஏற்படும் நன்மைகள் குறித்தும் மண்ணில் கரிமச் சத்து களை அதிகரிக்க பின்பற்ற வேண்டிய வழிமுறைகள் குறித்தும் ரசாயன உரங்கள் மற்றும் பூச்சிக்கொல்லிகள் பயன்படுத்துவதால் மண்ணில் ஏற்படும் விளைவுகள் குறைத்தும் அதற்கு மாற்றாக அங்கக முறையில் பின்பற்ற வேண்டிய தொழில்நுட்பங்கள் குறித்தும் விவசாயிகளுக்கு விளக்கம் அளித்தார்.

இப்பயிற்சியில் விவசாயிகளின் சந்தேகங்கள் மற்றும் கேள்விகள் குறித்து விளக்கம் அளிக்கப்பட்டது. முன்னதாக அன்னவாசல் தொழில்நுட்ப மேலாளர் ரவிராஜன், முடிவில் அன்னவாசல் வட்டார வேளாண்மை அலுவலர் கௌசல்யா, தற்போது செயல்படுத்தப் படும் திட்டங்கள் மானியங்கள் குறித்தும் விவசாயிகளுக்கு எடுத்துரைக்கப்பட்டு நன்றி கூறினார். பயிற்சி ஈஸ்வரன் கோயில் பஞ்சாயத்தை சேர்ந்த 40 விவசாயிகள் கலந்து கொண்டு பயன்பெற்றனர். பயிற்சிக்கான ஏற்பாடுகளை அட்மா திட்ட அலுவலர் சக்திவேல் மற்றும் உதவி வேளாண்மை அலுவலர் நந்தனி ஆகியோர் ஏற்பாடு செய்து கலந்து கொண்டனர்.

